மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தானம் கொடுக்கிற மாட்டை பல்லைப் பிடித்துப் பதம் பார்க்கக் கூடாது என்று சொல்வார்கள். பயனளிக்கும் நிலங்கள் எவ்வளவு என்ற விவரம் இல்லை. தனிக் கேள்வி கேட்டால் விவரம் கொடுக்கலாம்.

Madras Corporation Elections.

* 256 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) the number of riots, stabbing incidents that took place near the counting centres after the Madras City Corporation Elections;

(b) (1) the number of persons arrested ; and

(2) the number of persons prosecuted; and

(c) the number of persons sentenced ?

மாநகராட்சி தேர்தல்.

திரு. ஆர். கிருஷ்ணஸ்வாமி நாயுடு : திரு. என். ஆர். தியாகராஜன் : சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) சென்னை மாநகராட்சி தேர்தல் முடிந்து வாக்கு எண்ணுமிடத்தில் எத்தனை கலகங்கள், கத்திக் குத்துக்கள் நடந்தன ?

(இ) (1) எத்தனை பேர் கைதாயினர் ? (2) எத்தனை பேர் மீது வழக்கு தொடரப்பட்டன ?

(உ) எத்தனை பேர் தண்டனையடைந்தார்கள் ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) 1968 அக்டோபரில் நடைபெற்ற சென்னை மாநகராட்சித் தேர்தலின்போது வாக்கு எண்ணுமிடங்களுக்கு அருகில் கத்திக்குத்து நிகழ்ச்சி எதுவும் நடக்கவில்லை. ஆனால் தியாகராயர் கல்லூரியில் வாக்கு எண்ணும் இடத்தின் முன் பொது மக்களின் பாதுகாப்பிற்கு ஊறுவிளைவித்து சோடா பாட்டில்களையும், கற்களையும் வீசியெறிந்து கலவரம் ஏற்படுத்தும் நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

(இ) and (உ) தியாகராயர் கல்லூரி அருகில் ஏற்பட்ட கலவரத்தின் போது மூவர் கைது செய்யப்பட்டனர். இது சம்பந்தமாக வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. அதில் மூவரும் தண்டிக்கப்பட்டு குற்றவாளிகள் நன்னடத்தை சட்டத்தின் கீழ் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

" Gherao " at Madurai Central Bus Stand.

* 257 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether ' Gherao ' was observed in January 1968, in the Central Bus Stand at Madurai by parking the taxis in a row across the exit gate thereby blocking the buses from coming out of the bus stand; and

(b) if so, the reasons therefor ?

27th March 1969]

மதுரை பேருந்து நிலையத்தில் "கேரோ"

திரு. ஆர். கிருஷ்ணசுவாமி நாயுடு, (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968 ஜனவரியில் மதுரையில் வாடகைக் கார்களை குறுக்கே நிறுத்தி பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகளை வெளியே வர முடியா மல் கேரோ செய்தனரா ?

(இ) ஆமெனில், இதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) 1968-ம் வருடம் ஜனவரி மாதம் 30-ம் தேதி அன்று மதுரை பேருந்து நிலையத்தில் ஒரு சில வாடகைக் கார்கள் மூலம் சிறிது நேரத்துக்குப் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது. காவல்துறை அதிகாரிகள் தலையிட்டதனால், விரைவிலேயே அப்போக்குவரத்து நெருக்கடி நீங்கிவிட்டது. இதை "கேரோ" என்று கூற வேண்டியதில்லை.

(இ) போக்குவரத்துக் காவலர் ஒருவருக்கும் வாடகைக் காரோட்டி ஒருவருக்குமிடையில் வாக்குவாதம் முற்றியதன் காரணமாக, பிற வாடகைக் காரோட்டிகள் தங்களது வண்டிகளைச் சிறிது நேரத்திற்குப் பேருந்து நிலைய நுழைவாயிலில் நிறுத்தி வைத்தனர்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : இதேபோன்ற சம்பவம் சென்னையிலும் கடந்த இரண்டு வாரத்திற்கு முன்பு ஏற்பட்டதா ? போக்கு வரத்து சரிப்படுத்தக் கூடிய அதிகாரிகளை, வாடகைக் கார் ஓட்டுபவர்கள் அடிக்கடி தொந்தரவு செய்வதைப் பற்றி அரசு கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மூலக் கேள்வியில் குறிப்பிட்ட சம்பவம் மதுரையில் நடைபெற்றது. அதில் வாடகைக் கார் ஓட்டி ஒருவர், வாடகைக் காரை நிறுத்துவதற்கு இல்லாத இடத்தில் நிறுத்தினார் என்பதால காவலிலிருந்த கான்ஸ்டேபிள் அவரை வெளியே போகச் சொல்ல, அவர் மறுக்க, காரோட்டியை காரிலிருந்து வெளியே இழுக்க, நெருக்கடி ஏற்பட்டது. அதைப் போன்ற நெருக்கடி இரண்டு வாரத்திற்கு முன்னால் சென்னையில் ஏற்பட்டது என்ற தகவல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லத்தான் எனக்குத் தெரிகிறது.

State Transport Buses.

*258 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether any bus plied sans registration number during the Indian International Trade and Industries Fair held at Madras, and

(*b*) the number of State Transport buses which were allowed to ply in the City sans the State Emblem ?

தமிழ் நாடு அரசு பேருந்துகள்

***திரு. ஆர். கிருஷ்ணசுவாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்)** : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை உலகக் கண்காட்சியில் ரிஜிஸ்ட்ரேஷன் நம்பரின்றி பஸ் ஓட்டப்பட்டதா ?

(இ) அரசாங்க சின்னமின்றி எத்தனை பேருந்துகள் நகரில் ஓட்டப் பட்டன ?